**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை 21 மாவட்டங்களில் துவக்குதல்– தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தெரிவு செய்தல்–ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.17

நாள்:02–03–2015
ஜய, மாசி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.83, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 10–12–2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2012/மஇக4/20/14, நாள் 28.1.1.5

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், திருவள்ளூர், கடலூர், திருவாரூர், தூத்துக்குடி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர் மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில் தற்போது செயல்பட்டு வரும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை தவிர்த்து, மீதமுள்ள 21 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை, 01.12.2014 முதல் புதியதாக துவக்கிட அனுமதியும் மற்றும் ஒரு இல்லத்திற்கு 4 மாதங்களுக்கான செலவினமாக ரூ.3,51,600/– வீதம், 21 இல்லங்களுக்கு, ரூ.73,83,600/– நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மாவட்ட ஆட்சியர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பட்டியலிட்டு, அந்நிறுவனங்கள் மூலம் 20 மாவட்டங்களில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லத்தினை செயல்படுத்திட அங்கீகரித்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–15 ஆம் நிதியாண்டில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை புதியதாக துவக்கிட ஆணையிடப்பட்டுள்ள 21 மாவட்டங்களில், புதுக்கோட்டை மாவட்டத்தினை தவிர்த்து, மீதமுள்ள 20 மாவட்டங்களில், மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு

இல்லங்களை, மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் பெறப்பட்டுள்ள பின்வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் செயல்படுத்திட அரசு ஆணையிடுகிறது:-

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | தொண்டு நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | விருதுநகர் | ஜீவக்கல் சமூக நல இளைஞர் மன்றம்,<br>2 358 திருவில்லிபுத்தூர் மெயின் ரோடு, ஆஈஞ்சார் விலக்கு சிவகாசி மேற்கு, விருதுநகர் மாவட்டம். |
| 2. | விழுப்புரம் | குளுணி அபய இல்லம், துறிஞ்சிபூண்டி, மேல்மலையனூர், செஞ்சி, விழுப்புரம் மாவட்டம். |
| 3. | திருப்பூர் | வேல் பிளஸ் மனநல காப்பகம்,<br>எஸ். பெரியபாளையம்,<br>ஊத்துக்குளி ரோடு,<br>திருப்பூர் மாவட்டம். |
| 4. | கன்னியாகுமரி | எம்மாவூஸ் மனநல காப்பகம் (பெண்கள்), மேக்காமண்டம், கன்னியாகுமரி மாவட்டம். |
| 5. | கிருஷ்ணகிரி | லிட்டில் ஹார்ட்ஸ்,<br>16, 2–வது சாலை, விகாஸ் நகர்,<br>குழந்தைகள் பூங்கா எதிரில், மத்திகிரி, ஓசூர்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 6. | பெரம்பலூர் | வேலா தொண்டு நிறுவனம், விழுப்புரம். |
| 7. | நீலகிரி | நாயல்ஸ் கோன் அறக்கட்டளை,<br>கூடலூர், நீலகிரி மாவட்டம். |
| 8. | நாகப்பட்டினம் | கார்டன் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான புணரமைப்பு மையம்,<br>299, சிதம்பரம் மெயின்ரோடு,<br>விளந்திட சமுத்திரம், சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம். |
| 9. | தேனி | போதி மனநலம் மற்றும் அலைட் சயின்ஸ்,<br>இராஜகோபாலனம்பட்டி, பஞ்சாயத்து,<br>ஜி. முத்துக்கிருஷ்ணாபுரம், ஆண்டிப்பட்டிட வட்டம்,<br>தேனி மாவட்டம். |
| 10. | சென்னை | அன்பகம் மறுவாழ்வு மையம்,<br>5, சுப்ரமணியம் மெயின்ரோடு, நம்மால்வார்பேட்டை,<br>ஓட்டேரி, சென்னை–12. |
| 11. | அரியலூர் | ஒசை தொண்டு நிறுவனம்,<br>செல்லன் செட்டித் தெரு, ஆண்டிமடம், அரியலூர் மாவட்டம். |
| 12. | திண்டுக்கல் | எம் .எஸ்.செல்லமுத்து, அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மையம்,<br>611, கே. கே. நகர்,<br>மதுரை–20. |
| 13. | சிவகங்கை | புனித ஜீசாப்பே மொஸ்காட்டி,<br>(St. Giu sepee Moscati Psychocial Rehabilitation Cent sore Meenavayal Village, Ariyakudi, Karaikudi Taluk. |

| | | |
|---|---|---|
| 14. | நாமக்கல் | அன்னை ஜே.ஜே.கே. சம்பூரணியம்மாள் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான இல்லம், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம். |
| 15. | தர்மபுரி | நியூ லைப் மனநல மறுவாழ்வு இல்லம், சோகத்தூர் கூட்ரோடு, த ர்மபுரி மாவட்டம். |
| 16. | திருநெல்வேலி | பிசப் சார்ஜெண்ட் அன்பின் இல்லம், முருகன் குறிச்சி, பாளையங்கோட்டை வட்டம், திருநெல்வேலி மாவட்டம். |
| 17. | தஞ்சாவூர் | அன்பாலயம், சிரேயஸ் சத்திரம், வடக்கு வாசல், தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம். |
| 18. | காஞ்சிபுரம் | லிட்டில் ஹார்ட்ஸ் மனநல காப்பகம், கடப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 19. | திருவண்ணாமலை | அமல ராக்கினி எ ஜுகேசன், எக்கனாமிக் அண்ட் சோசியல் டெவலப்மென்ட் சொசைட்டி, அமலிவனம், சூசைநகர்(அஞ்சல்), போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். |
| 20. | கரூர் | சாந்திவனம் (Trust), சீத்தப்பட்டி கிராமம், திருச்சி–திண்டுக்கல் சாலை, குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம். |

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்மந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**நகல்:–**
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.